## 108. சோர்ந்து போவதில்லை

**பல்லவி**

சோர்ந்து போவதில்லை - (நாங்க)
எங்க துணையாளர் முன்செல்கிறார்

**அனுபல்லவி**

*சிலுவை நாயகன் இரத்ததினால்*
*நீதிமானாக மாற்றப்பட்டோம்*

**சரணங்கள்**

1. எப்பக்கம் நெருக்கப்பட்டாலும்
ஒடுங்கி நானும் போவதில்லை
புதிதாக்கப்படுகின்றேன்
தேவசாயல் அடைக்கின்றேன்
- நாங்க சோர்ந்து

2. எப்பக்கம் கலக்கம் அடைந்தாலும்
மனம் முறிந்து போவதில்லை
புதிதாக்கப் படுகின்றோம்
தேவ மகிமை அடைகின்றோம்
- நாங்க சோர்ந்து

3. எப்பக்கம் துன்ப பட்டாலும்
கைவிடப்படுவதில்லை
புதிதாக்கப்படுகின்றோம்
மறுரூபம் அடைகின்றோம்
- நாங்க சோர்ந்து

4. புறம்பான மனுஷன் அழிந்தாலும்
உள்ளான மனிதன் நாளுக்குநாள்
புதிதாக்கப் படுகின்றான்
நித்திய மகிமை அடைகின்றான்
சோர்ந்து போக மாட்டோம்
எங்க துணையாளர் முன்செல்கிறார்